# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 70 / 2020**

திருமதி. சகீனா.பீ,
க/பெ. (லேட்), அமீர்சா சாயபு,
முகமதியார் பேட்டை,
பள்ளிவாசல் தெரு,
கூத்தக்குடி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – 606 203.

. . . . மேல்முறையீட்டாளர்
(Rep by திரு.முகம்மது ரஷீது)

எதிர்

செயற்பொறியாளர்/ கள்ளகுறிச்சி,
கள்ளகுறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
செயற்பொறியாளர் அலுவலக வளாகம்,
ராஜம்மாள் நகர், அண்ணா நகர்,
கள்ளகுறிச்சி – 606 201.

. . . எதிர்மனுதாரர்
(திரு. M. கணேசன், செயற்பொறியாளர்/ கள்ளகுறிச்சி)

**கேட்புரை நாள்: 03–02–2021**

**ஆணை நாள் : 09–04–2021**

19.12.2020 அன்று பெறப்பட்ட திருமதி. சகீனா.பீ, க/பெ. (லேட்), அமீர்சா சாயபு, முகமதியார் பேட்டை, பள்ளிவாசல் தெரு, கூத்தக்குடி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – 606 203 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 70/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 03.02.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் உடையநாச்சி கிராமத்தில் உள்ள தனது நில அளவை எண் 23/1–Lல் உள்ள கிணற்றுக்கு இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளரின் கணவர் திரு. அமீர் சாயபு அவர்கள் உடையநாச்சி கிராமத்தில் நில அளவை எண் 23/1–Lல் உள்ள கிணற்றுக்கு இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்ததாகவும் பின்னர் தனது கணவர் இறந்துவிட்ட காரணத்தால் இது நாள் வரை தனக்கு இலவச விவசாய மின் இணைப்பு கிடைக்கப்பெறவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 இது குறித்து பல முறை செயற்பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளருக்கும் மனு அளிக்கப்பட்டு எந்தவொரு தகவலும் கிடைக்கப்பெறாததால் மேல்முறையீட்டாளர் கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டத்தில் 23.09.2019 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம் 04.03.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் தீர்வு –

கள்ளகுறிச்சி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 04.03.2020 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்ப்புரை*

*கள்ளக்குறிச்சி கோட்டம், நாகலூர் பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட விவசாய விண்ணப்ப பதிவு எண் 194/17.07.97–க்கு திரு அமிர்சா, த/பெ. அசன்முகம்மது, முகம்மதியார்பேட்டை அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அரசின் சிறப்பு வரிசை சாதாரண முன்னுரிமையில் தயார் நிலை நோட்டீஸ் கடந்த 03.11.2010 அன்று வழஙகப்பட்டுள்ளது. நோட்டீஸ் வழஙகப்பட்ட போது மனுதாரர் உயிருடன் இல்லை என்பது*

*அவரது இறப்பு சான்றின் மூலம் உறுதி ஆகிறது. நோட்டீஸ் வழஙகப்பட்டு, உரிய காலநீட்டிப்பு காலக்கெடுவுக்குள் அவரது வாரிசுதாரர்கள் யாரும் இம்மின் இணைப்பிற்கான காலநீட்டிப்பு கோரி விண்ணப்பிக்கவில்லை. தற்போது அவரது மனைவி மற்றும் மகன் பலமுறை அலுவலகம் சென்றதாக கூறுவது ஏற்புடையது அல்ல. மேலும் இளமின் பொறியாளர் அலுவலகம் மட்டுமே சென்றதாகவும் தனக்கு யாரும் வழிகாட்டுகதல் செய்யவில்லை என மனுதாரர் கூறுவது ஏற்புடையது அல்ல. உதவிசெயற்பொறியாளர், செயற்பொறியாளர் ஆகிய அலுவலர்களை சந்தித்து எவ்விதமான மனுவும், காலநீட்டிப்பு கேட்போ கோரவில்லை காலதாமதமாக வந்து விண்ணப்ப எண். 194/17.07.97–க்கு மின் இணைப்பு கோருவது ஏற்படையது அல்ல. எனவே வாரிய விதிமுறைகளின்படி தயார் நிலை நோட்டீஸ் வழங்கி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டுள்ளதால் இவ்விவசாய விண்ணப்பத்திற்கு சாதாரண முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்க சாத்திய கூறுகள் இல்லாத காரணத்தால் இவருடைய கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது என தீர்ப்பளிக்கப்படுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 03.02.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு.முகம்மது ரஷீது அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு. M. கணேசன், செயற்பொறியாளர்/கள்ளகுறிச்சி, கள்ளகுறிச்சி மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுஙகு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுஙகுமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதஙகள்:</u>**

5.1 மேல்முறையீட்டாளரின் கணவர் திரு அமீர் சாயபு அவர்கள் கடந்த 1997–ம் ஆண்டு உடையநாச்சி கிராமத்தில் நில அளவை எண் 23/1–Lல் உள்ள கிணற்றுக்கு இலவச விவசாய

மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்து அது பதிவு எண் 194/17.07.97 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பின்னர் தனது கணவர் இறந்துவிட்ட காரணத்தால் இது நாள் வரை தனக்கு இலவச விவசாய மின் இணைப்பு குறித்து யாதொரு அறிவிப்பும் கிடைக்கவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மின் இணைப்பு வழஙகப்படாதது குறித்து பல முறை செயற்பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் ஆகியோருக்கு பதிவு தபால் அனுப்பி பதில் ஏதும் கிடைக்கப் பெறாமையால் தனது மகன் 6.8.2019 அன்று கள்ளக்குறிச்சி கோட்ட மாதாந்திர குறைதீர் கூட்டத்தில் நேரில் ஆஜராகி புகார் மனு அளித்து விளக்கம் கோரியதாகவும், அது நடந்து முடிந்த கதை நீஙகள் புதிதாக தோட்டக்கலை மின் இணைப்புக்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு கூறிவிட்டதால் வேறு வழியின்றி கள்ளக்குறிச்சி மின பகிர்மான வட்ட மின்குறைதீர் மன்றத்தில் பதிவு அஞ்சல் வழியாக மேல்முறையீட்டாளர் முறையீடு செய்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இலவச மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடம் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதஙகள்:</u>

6.1 கள்ளக்குறிச்சி வட்டம், கூத்தக்குடி, முகமதியார்பேட்டை, பள்ளிவாசல் தெருவை சேர்ந்த அசன்முகமது குமாரர் அமீர்சா சாயபு அவர்கள் சாதாரண முன்னுரிமையின் கீழ் விவசாய மின்இணைப்பு வேண்டி பதிவு எண். 1794/17.07.1997–ன்படி உடையநாச்சி வருவாய் கிராம சர்வே எண் 23/1L-ல் உள்ள கிணற்றிற்கு 5.0HP மின்சுமைக்கு விண்ணப்பம் பதிவு செய்துள்ளதாகவும் இவ்விண்ணப்பத்தின் நகலை எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

6.2 மேற்கண்ட விண்ணப்பதாரருக்கு கடந்த 2010–ம் ஆண்டு விவசாய மின்இணைப்பு வழஙக சாதாரண முன்னுரிமை திட்டத்தின் அடிப்படையில் மின்இணைப்பு வழஙகுவதற்காக தயார்நிலை பதிவு செய்யக்கோரி 03.11.2010 தேதியிட்ட நோட்டீஸ் வழஙகப்பட்டுள்ளதாகவும் இது சம்மந்தப்பட்ட ஆவணஙகளின் நகல் சமர்ப்பித்து, தமிழ்நாடு மின்சார வாரிய விதிமுறைகளின்படி நோட்டீஸ் காலமான 90 நாள் நோட்டீஸ் (08.02.2011) மற்றும் அதிலிருந்து அதிகபட்ச காலநீட்டிப்பு காலமான 5 ஆண்டுகளுக்குள் (08.02.2016) விண்ணப்பதாரர்

தயார்நிலை பதிவு செய்ய வேண்டும் தவறும்பட்சத்தில் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும். விண்ணப்பதாரர் கடந்த 20.03.2002 அன்று இறந்துவிட்டதாக தெரியவந்ததாகவும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் விண்ணப்பதாரரின் வாரிசுகளிடமிருந்து மின்இணைப்புகோரி எவ்வித கோரிக்கையும் பெறப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 இந்நிலையில் அசல் விண்ணப்பதாரரின் மனைவி திருமதி. சகீனாபீ, க/பெ.அமீர்சா சாயபு அவர்கள் 23.04.2019 அன்று செயற்பொறியாளர்/இ&ப/கள்ளக்குறிச்சி அவர்களிடம் மேற்கண்ட விவசாய விண்ணபத்தின் அடிப்படையில் தனது பெயருக்கு மின்இணைப்பு வழங்கக்கோரி மனு அளித்துள்ளதாகவும் அம்மனுவிற்கு இளமின்பொறியாளர்/ இ&ப/நாகலூர் அலுவலகத்திலிருந்து 19.07.2019 தேதியிட்ட கடிதத்தின் மூலம் பதில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இதனை தொடர்ந்து மனுதாரர் தலைவர்/நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்/கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம்/கள்ளக்குறிச்சி அவர்களுக்கு மேற்கண்ட விவசாய விண்ணபத்தின் பேரில் தனக்கு மின்இணைப்பு வழங்க உத்திரவிடக்கோரி 21.09.2019 அன்று மனு அளித்துள்ளார். இம்மனுவிற்கு இளமின்பொறியாளர்/ இ&ப/நாகலூர் அவர்கள் தயார்நிலை பதிவு செய்ய 90 நாள் நோட்டீஸ் வழங்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால் இவ்விவசாய விண்ணபத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது என்று 25.10.2019 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மததாரருக்கு பதில் அளிக்கப்பட்டதாகவும், மனுதாரர் CGRF-ல் அளித்துள்ள மேற்கண்ட மனுவின் அடிப்படையில் கடந்த 13.02.2020 அன்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு ‘‘விண்ணபதாரர் உயிருடன் இல்லாத நிலையில் நோட்டீஸ் வழங்கப்பட்டு உரிய காலநீட்டிப்பு கோரி விண்ணபிக்கவில்லை என்றும் வாரிய விதிமுறைகளின்படி தயார்நிலை பதிவு செய்யக்கோரி நோட்டீஸ் வழங்கி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டுள்ளதால் இவ்விவசாய விண்ணபத்திற்கு சாதாரண முன்னுரிமை அடிப்படையில் மின்இணைப்பு வழங்க சாத்திகூறுகள் இல்லாத காரணத்தால் மனுதாரரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது” என்று 04.03.2020 அன்று தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் இயக்குநர்/பகிர்மானம் அவர்களால் **11.01.2011** அன்று தலைமையகத்தில் நடத்தப்பட்ட கலந்தாய்வு கூட்டத்தில் **01.04.2000** தேதிக்கு முன்பு பதிவு செய்த விண்ணப்பங்களுக்கு தயார்நிலை பதிவு செய்யக்கோரி நோட்டீஸ் அனுப்பப்பட்டு 5 ஆண்டுகளுக்குள் தயார்நிலை பதிவு செய்யாமல் இருந்தால் அவ்விண்ணப்பங்களை ரத்து செய்து விண்ணப்பதாரர்களுக்கு தகவல் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 எனவே பதிவு எண் 194/17.07.1997 கொண்ட விவசாய விண்ணப்பத்திற்கு சாதாரண முன்னுரிமை அடிப்படையில் தயார்நிலை பதிவு செய்யக்கோரி நோட்டீஸ் வழங்கி காலக்கெடு முடிந்து காலநீட்டிப்பு காலமான 5 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டப்படியால் மின்இணைப்பு வழங்க வாரிய விதிமுறைகளின்படி வாய்ப்புகள் இல்லை என்பதை எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையிட்டாளரின் கணவர் திரு அமீர் சாயபு அவர்கள் 1997–ம் ஆண்டு நில அளவை எண் 23/1L ல் உள்ள கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு பதிவு எண் 194/17.07.97 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இது வரை யாதொரு அறிவிப்பும் கிடைக்கப் பெறாததால் தனது மகன் **6.8.2019** அன்று கள்ளக்குறிச்சி கோட்ட மாதாந்திர குறைதீர் கூட்டத்தில் ஆஜராகி புகார் மனு அளித்தும் பயன் இல்லாததால் குறைதீர் மன்றத்தில் மனு செய்ததாகவும், குறைதீர்மன்ற ஆணை தனக்கு திருப்தியளிக்கவில்லையென தெரிவித்து இலவச மின் இணைப்பு வழங்க வேண்டுகிறார்.

7.3 கள்ளக்குறிச்சி வட்டம், கூத்தக்குடி, முகமதியார்பேட்டை பள்ளிவாசல் தெருவை சேர்ந்த அமீர்சா சாயபு விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு எண் 194/17.07.97 ன்படி உடையநாச்சி வருவாய் கிராம சர்வே எண் 23/1L ல் உள்ள கிணற்றிற்கு 5 HP மின்சுமைக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 2010–ம் ஆண்டு சாதாரண முன்னுரிமை திட்டத்தின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்க தயார் நிலை பதிவு செய்யக் கோரி **03.11.2010** தேதியிட்ட அறிவிக்கை வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேல்முறையீட்டாளர் தயார் நிலை பதிவு செய்யவில்லையெனவும், காலநீட்டிப்பு கேட்டு மனு அளிக்கவில்லையெனவும், ஆகையால் தயார் நிலை பதிவு செய்ய அறிவிக்கை வழங்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால் மேற்படி விவசாய விண்ணப்பத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தயார் நிலை பதிவு செய்யக் கோரி 3.11.2010 தேதியிட்ட அறிவிக்கை (notice) வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். ஆனால் மேற்படி அறிவிக்கை மேல்முறையீட்டாளருக்கு அனுப்பியதற்கான உரிமம்தாரர் அலுவலகத்தின் ஆதாரமோ (despatch seal) அல்லது தபால் துறையின் மூலம் அனுப்பியதற்கான ஆதாரமோ அல்லது மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை ஆவணமோ சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்படி தயார் நிலை பதிவு செய்ய 3.11.2010 தேதியிட்ட அறிவிக்கை கடிதம் தனக்கு கிடைக்கப் பெறவில்லையென மேல்முறையீட்டாளரும் தெரிவித்துள்ளார். ஆகையால் மேற்படி அறிவிக்கை மேல்முறையீட்டாளருக்கு அனுப்பப்படவில்லையென்றே கருதப்படுகிறது.

7.5 மேலும் தயார் நிலை பதிவு செய்ய அளித்த அறிவிக்கைக்குப் பிறகு தேவையான வருவாய் ஆவணங்கள் சமர்ப்பித்து, தமிழ்நாடு மின்சார வாரிய விதிமுறைகளின்படி நோட்டீஸ் காலமான 90 நாட்கள் (08.02.2011) மற்றும் அதிகபட்ச கால நீட்டிப்பு காலமான 5 ஆண்டுகளுக்குள் (08.02.2016) விண்ணப்பதாரர் தயார் நிலை பதிவு செய்யவேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக தலைமை பொறியாளர் திட்டமிடல் அவர்களின் 22.09.2009 நாளிட்ட சுற்றறிக்கை கடிதத்தில் கூறப்பட்டுள்ள தேவையான பத்திகளின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice.*
>
> *2. The applications which were kept pending (except court case/ dispute case after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant.*
>
> *3. Cancelled applications need not be revoked.*
>
> *4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if*

*the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged."*

7.6 மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும்போது நாம் அறிவது, ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை பதிவு செய்யாத பட்சத்தில் 90 நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு 5 வருடஙகள் கழிந்த விவசாய விண்ணப்பஙகள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகவோ, அவ்வாறு ரத்து செய்யப்பட்டதாக மேல்முறையீட்டாளருக்கு தெரிவித்ததாகவோ எந்தவொரு ஆவணமும் எதிர்மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்நிலையில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகக் கருதமுடியாது. எனவே மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுத்து புதியதாக தயார் நிலை அறிவிக்கை கொடுத்து விவசாய மின் இணைப்பு வேண்டும் மேல்முறையீட்டாளருக்கு தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணைய விதிகளின் படி தேவைப்படும் ஆவணஙகளை பெற்றுக் கொண்டு விண்ணப்ப பதிவு எண் 194/19.07.1997–க்கு மின் இணைப்பு வழஙகுமாறு தீர்வு செய்கிறேன்.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 பத்தி 7–ல் உள்ள தீர்வின்படி புதியதாக தயார் நிலை அறிவிக்கை கொடுத்து தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணைய விதிகளின் படி தேவைப்படும் ஆவணஙகளை பெற்றுக் கொண்டு விண்ணப்ப பதிவு எண் 194/19.07.1997–க்கு விவசாய மின் இணைப்பு மேல்முறையீட்டாளருக்கு வழஙகுமாறு தீர்வு செய்கிறேன். தேவைப்படும் ஆவணஙகளைப் பெற்று, மேல்முறையீட்டாளர் ஆவணஙகளை சமர்ப்பித்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மின் இணைப்பு வழஙகுமாறு ஆணையிடுகிறேன்.

8.2 மேற்கண்ட ஆணையை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை மின் இணைப்பு வழஙகிய தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறேன்.

8.3 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 70/2020 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திருமதி. சகீனா.பீ,
க/பெ. (லேட்), அமீர்சா சாயபு,
முகமதியார் பேட்டை,
பள்ளிவாசல் தெரு, கூத்தக்குடி,
கள்ளக்குறிச்சி மாவட்டம் – 606 203.

2. செயற்பொறியாளர்/ கள்ளகுறிச்சி,
கள்ளகுறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
செயற்பொறியாளர் அலுவலக வளாகம்,
ராஜம்மாள் நகர், அண்ணா நகர்,
கள்ளகுறிச்சி – 606 201.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
கள்ளகுறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவாஜி நகர், லயன்ஸ் கிளப் பில்டிங,
கள்ளக்குறிச்சி – 606 202.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.